Padasalai.Net's Special - காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 3 ( 2018 )

( Based on New Official Model Question Paper Pattern )

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி                                        மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.                 20 × 1 = 20

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு _______ என்று பெயர்.

   அ. அங்காடி   ஆ. நாளங்காடி   இ. அல்லங்காடி

2. அடர்ந்த வனப்பகுதிகளில் பாதையை உருவாக்கி வியாபாரம் செய்யவழி வகுத்தவர் ----------

   அ. ஜானகர்   ஆ. அலாவுதின் கில்ஜி   இ. பால்பன்

3. பின் வருவனவற்றில் எவை உரிமை மாற்றம் செய்ய முடியும்?

   அ. தொழில்   ஆ. சிறப்புத் தொழில்   இ. வேலைவாய்ப்பு

4. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு ---------

   அ. வரையறு பொறுப்பு   ஆ. வரையறாப் பொறுப்பு   இ. விரைவான முடிவு

5. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைக்கப் படுகிறது?

   அ. கர்த்தா   ஆ. கூட்டு வாரிசுதாரர்   இ. கூட்டாளிகள்

6. நிறுமச் சட்டத்தின் அட்வணை - அ (Table-A) என்பது -------

   அ. நிகழச்சிக் குறிப்பேட்டின் மாதிரி   ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

   இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி

7. கூட்டுபங்கு நிறுமத்தை தொடங்க அதிக முதலீடும், அதிகமான ---------- தேவைப்படுகின்றது.

   அ. உழைப்பு   ஆ. வேலைப்பாடு   இ. நேரம்

8. கூட்டுறவு தோல்வி அடைவதற்கான காரணம் -------

   அ. வரம்பற்ற உறுப்பினர்   ஆ. ரொக்க வியாபாரம்   இ. தவறான நிர்வாகம்

9. பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

   அ. நாடாளுமன்றம்   ஆ. அதன் துணை நிறுவனங்கள்   இ. தலைமையகம்

10. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு _______ க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.

    அ. 75%   ஆ. 60%   இ. 51%

11. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்ற வங்கி -----------

    அ. மத்திய வங்கி   ஆ. வணிக வங்கி   இ. கூடடுறவு வங்கிகள்

12. பரவலாக்கப்பட்ட வங்கி சேவைகளில் சேராதவை எவை?

    அ. பரஸ்பர நிதி   ஆ. பாதுகாப்பு பெட்டகங்கள்   இ.வீட்டுவசதி கடன்

13. எந்த வகையான கணக்கு, குறிப்பிட்டநேரத்தில் குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?

    அ. சேமிப்பு வைப்பு   ஆ. தொடர் வைப்ப   இ. நிலையானவைப்பு

14. எந்த ஆண்டின் உணவுச் சட்டத்தின் கீழ், இந்திய உணவுக் கழகம் அமைக்கப்பட்டது?

    அ. 1964   ஆ. 1864   இ. 2012



15. எலி, பூச்சிகள், ஆகியவற்றிற்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பண்டககாப்பகம் ----------

    அ. பொது பண்டககாப்பகம் ஆ. சிறப்பு பொருள் பண்டககாப்பகம் இ. குளிர்பதன பண்டக காப்பகம்

16. எந்த வகையான நடவடிக்கைகளை ஒரு நிறுவனம் புற ஒப்படைப்பு செய்கின்றன?

    அ. இணை   ஆ. மைய   இ. வாணிக

17. பின்வருவனவற்றுள் எது கடல் சார் காப்பீடு வகையினை சார்ந்தது?

    அ. பணம் திருப்பத் திட்டாவணம்   ஆ. மருத்துவ காப்புரிமை இ. கப்பல் சார் காப்பீடு

18. வான்வழி அனுப்பீட்டு இரசீது எத்தனை அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது ?

    அ. ஒன்று   ஆ. இரண்டு   இ. மூன்று

19. மருத்துவ கருவிகள் தயாரிப்பு, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில் போன்றவை ---------

    அ. வருமான தொழில்கள்   ஆ. சேவைத் தொழில்கள்   இ. உற்பத்தி தொழில்கள்

20. தனியாள் வணிகர் ---------- விதிமுறைகளின் குறுக்கீடு இன்றிச் செயல்படுகிறார்.

    அ. கூட்டாண்மை   ஆ. தனியார்   இ. அரசு

### பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.                 7 × 2 = 14

21. "வங்கிகளின் உதவியின்றி எந்த தொழிலமைப்புகளும் இயங்க முடியாது" என்ற கூற்று உண்மையா? விளக்கம் தருக.

22. குறைந்தபட்சம் 2 பங்குதாரர்கள் மற்றும் 2 இயக்குநர்களைக் கொண்டு செயல்படும் நிறுமம் எது? அந்நிறுமத்தை எத்தனை முறைகளில் அமைக்கலாம்? அவை யாவை?

23. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?

    அ.. மருந்துக்கடை   ஆ. இணையதள அமைப்பு   இ. சட்டநிறுமம்

24. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?

25. ஒரு பங்கு – ஒரு வாக்கு முறை கூட்டுப்பங்கு நிறுமத்திற்கு எந்தளவிற்கு பாதிப்பை உண்டாக்குகிறது?

26. பொது முத்திரையே நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகக் கையெழுத்தாகும். ஏன்?

27. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

28. பன்னாட்டு நிறுவனம் - இலக்கணம் வரைக.

29. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளை,எத்தனை தலைப்புகளில் தொகுக்கலாம்? அவை யாவை?

30. காசோலை - வரைவிலக்கணம் தருக

### பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 32- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.                 7 × 3 = 21

31. பெயர்ச்சியியல் தேவை யாது?

32. நீண்ட தூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு மலிவான மற்றும் விரைவான போக்குவரத்து எது? அதனை விவரி?

33. வங்கி மேல்வரைப் பற்று - குறிப்பு வரைக.

34. அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் என்றால் என்ன?

35. மத்திய வங்கி பற்றி " டிகா " அவர்களின் கூற்று யாது?

36. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( ஏதேனும் ஆறு )

37. இந்து கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி

38. இந்து கூட்டுக் குடும்பத்தில், உறுப்பினர்கள் அனைவரின் விருப்பத்தின் பேரில் வியாபாரத்தை கலைக்க முடியுமா? விளக்கம் தருக.

39. வட இந்திய மௌரியர் காலப் பொருளாதார நிலையை எதன் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்?

40. கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாக பயன்படுத்த முடியுமா? ஆம் எனில், அதற்கான காரணங்களை கூறுக.

## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. பண்டமாற்று வணிகத்தின் தடைகள் யாவை?

( அல்லது)

வணிகத்தின் சிறப்பியல்புகளில் ஏதேனும் ஐந்தினை விவரி?

42. பின்வரும் வங்கிகளைப் பற்றி சிறு விளக்கம் தந்து, உதாரணம் தருக. அ) வணிக வங்கிகள் ஆ) வெளிநாட்டு வங்கிகள் இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வளர்ச்சி வங்கிகள் உ) சிறப்பு வங்கிகள்

( அல்லது)

வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

43. பண்டக இரசீதிலிருந்து பண்டக சான்றானை வேறுபடுத்துக.

( அல்லது )

போக்குவரத்து - வரைவிலக்கணம் தருக. மேலும் அதில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை விவரி?

44. தொழில் செயல்முறை புறத் திறனீட்டல், அறிவுசார் செயல்முறை புறத் திறனீட்டல் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக.

(அல்லது )

1 இது , நிறுமம் முறையாக அமைக்கப்பட்டதைச் சான்று பகரும் ஓர் ஆவணமாகும்.

2 இந்த ஆவணத்தில், இடம், நோக்கங்கள், பொறுப்பு மற்றும் முதலீடு தொடர்பான உட்பிரிவுகள் இருக்கும்.

3 இந்த ஆவணத்தில் குறிப்பிடப்படாத எச் செயலிலும் நிறுமம் ஈடுபட்டால், அச்செயல் வரம்பு மீறியச் செயல் எனஅழைக்கப்படுகிறது.

அ) அந்த ஆவணத்தின் பெயரைக் குறிப்பிடுக

ஆ) அதில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் நான்கினை விவரி.

45. தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது எத்தனை சதவிகிதம் வட்டிபெற ஒரு கூட்டாளிக்கு உரிமை உண்டு? வேறு எந்த வகையான உரிமைகளையெல்லாம் ஒரு கூட்டாளி பெற்றிருக்கிறார்?

(அல்லது)

1 இதன் சேவைகளை பாலினம், சமூகம், இன, அரசியல் அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்று பயன் அடையலாம்.



2 இது, உறுப்பினர்களால், உறுப்பினர்களுக்காக தாங்களாகவே, இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பாகும்.

அ) மேற்கண்ட வரிகள் உங்களுக்கு எத்தகைய அமைப்பினை ஞாபகப்படுத்துகின்றன?

ஆ) அதன் கொள்கைகளில் நான்கினை விவரி.

46. தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக.

( அல்லது )

பின்வரும் வாக்கியங்கள் எந்த வகையான காப்பீட்டு திட்டாவணத்தை குறிப்பிடுகின்றன என்பதைக் குறிப்பிட்டு, அவற்றைப்பற்றி ஒரு சிறு விளக்கம் தருக.

i) இவ்வகைத்திட்டாவணத்தில், முதிர்வுத்தொகை காப்பீடு பெறுநர் மரணமடைந்த பிறகு வழங்கப்படும்.

ii) இத்திட்டாவணத்தில் காப்பீடு பெறுநர், ஒரு குறுப்பிட்ட காலம் முடியும் வரை அல்லது அவரது மரணம் வரை இதில் எது முதலில் வருகிறதோ,அதுவரை முனைமத்தொகை செலுத்தவேண்டும்

iii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஆயுளுக்கு கூட்டாக, ஆயுள் காப்பீடு செய்வது.

iv) குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்ற செலவுகளை ஈடுகட்டுவதற்காக இத்திட்டாவணம் எடுக்கப்படுகிறது.

v) இத் திட்டாவணம், மகளிர்க்கு வழங்கப்படுகிறது. விபத்தின் காரணமாக மகளிர்க்கு ஏற்படும் இறப்பு, அல்லது செயலிழப்பினால் ஏற்படும் இழப்புக்காக அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஈட்டிறுதி வழங்கப்படும்.

47. ஒரு பொது வரையறை நிறுமம் தான் வெளியிடும் பங்குகளையும் கடனீட்டு பத்திரங்களையும் வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஆவணத்தின் பெயர் என்ன? அதன் உள்ளடக்கங்களில் ஏதேனும் எட்டினைக் குறிப்பிடுக.

( அல்லது )

வளங்களை இயந்திரம் மற்றும் தொழில் நுட்பத் திறமையுடன் உபயோகிக்கவல்ல பொருளாக மாற்றக் கூடியதே உற்பத்தித் தொழில் என்கிறோம்.

i) உற்பத்தித் தொழில்களை செயல்பாடுகள் மற்றும் அளவுகள் அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

ii) இயற்கையோடு தொடர்புடையவை முதன்மை உற்பத்தித் தொழில்களின் வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றை எடுத்துகாட்டுகளுடன் விளக்கமாக விவரி.